**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/CPT - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.
போன் : 2854 8529
2851 5038
பேக்ஸ் : 2851 6574

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **K. விஜயன்** | **S.S. சுப்பிரமணியன்** | **E. அந்தோணி** |

நாள்: **13.11.2015**

**பெறுநர்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

ஐயா,

**பொருள் : தமிழகத்தில் 2015 நவம்பர் 9,10,11 தேதிகளில் பெய்த பெருமழையால் மிகவும் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் பழுதடைந்த மின் இணைப்புகளை சரி செய்ய தளவாட சாமான்களை அளிப்பது அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு அடிப்படை வசதி - இரட்டிப்பு ஊதியம் வழங்க கோருதல் சம்மந்தமாக**

தமிழகத்தில் கடந்த 4 நாட்களாக பெய்யும் பெருமழையால் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் பெரும்பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. மின் இணைப்பு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. பழுதடைந்த மின் இணைப்புகளை சரி செய்து மீண்டும் மின்சாரம் வழங்குவது சம்மந்தமாக எங்களது கருத்துக்களை தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கையும் எடுக்க வேண்டுகிறோம்.

பாதிப்பை பொருத்த வரையில் கடலூர்,விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. கடலூர் மின் திட்டத்தில் மட்டும் 4000 மின் கம்பங்கள் பாதிப்பு அடைந்துள்ளது. மின் கம்பங்கள் இல்லாமல் திரும்பவும் அம்மாவட்டத்தில் மின்சாரம் வழங்குவது சாத்தியமான ஒன்றல்ல அதனால் வேறு மாநிலங்களில் மாவட்டங்களில் இருந்தாவது பெற்று அளித்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். சில இடங்களில் மின் மாற்றிகளும் பழுதடைந்துள்ளது. அவைகளை சரி செய்து மின்சாரம் வழங்க வேண்டியுள்ளது. பழுதடைந்த மின் மாற்றிகள், கம்பங்கள், மின் கம்பிகள் ஆகியவற்றை போதிய அளவிற்கு விநியோகம் செய்திட வேண்டுகிறோம்.

பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை சரி செய்யும் அவசரப்பணிகளை செய்வதற்கு இப்போதைக்கு அந்த திட்டங்களில் உள்ள பணியாளர்களைக் கொண்டு பணியை துரிதப்படுத்திட இயலாது. கடலூர் மின் திட்டத்தில் களஉதவியாளர் பதவி 160-க்கும் மேற்பட்ட பதவிகள் காலி பணி இடங்களாக உள்ளன. இந்த காலிப்பணியிடங்களை நிரப்பிட வேறு மாவட்டங்களிலிருந்து களப்பணி உதவியாளர்கள் ஊர்மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உத்தரவு பிறப்பித்து 4 மாதங்கள் கடந்த பின்னரும் மேற்பார்வை பொறியாளர்/ கடலூர் மின் திட்டம் அவர்களால் மறுநியமன உத்தரவு வழங்காததால் அப்பணி இடங்கள் காலியாகவே உள்ளது. என்பதை வேதனையோடு

குறிப்பிட வேண்டியுள்ளது. இனியாவது நிலுவையில் உள்ள மறு நியமன உத்தரவுகளை உடனடியாக வழங்கி பணி ஏற்கச்செய்து இப்போது ஏற்பட்டுள்ள அவசர பணியில் அவர்களை ஈடுபடுத்திட வேண்டுகிறோம்.

இதற்கிடையில் பெய்த பெருமழையால் கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்ய வேறு வட்டங்களிலிருந்து மின்வாரிய ஊழியர்களை ஈடுபடுத்தி உள்ளதாக தெரியவருகிறது. இந்த நடவடிக்கையை நாங்கள் வரவேற்கின்றோம். அங்கு சென்றுள்ள ஊழியர்களும் சேவை மனப்பான்மையோடு பணியாற்றுவார்கள். என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

வேறு மாவட்டங்களில் இருந்து நிவாரணப்பணிக்காக சென்றவர்கள் இரவுப்பகல் பாராமல் பணியாற்றுகின்ற போது அவர்களுக்கு வேண்டிய குடிநீர், உணவுப்பொருள்கள் உள்ளிட்ட அத்யாவசிய பொருள்கள் கிடைப்பதில் சிரமம் உள்ளதால் அப்பொருள்களின் விலைகள் கட்டுங்கடங்காத நிலையில் உயர்ந்துள்ளது.

இச்சூழ்நிலையில் அங்கு நிவாரணப்பணிகளுக்காக சென்றுள்ள ஊழியர்களுக்கு தங்குவதற்கு இடம், புதிய சூழ்நிலையில் பணியாற்றுவதில் ஏற்படுகின்ற உடல்நலக்குறைவு, பொருள்களின் விலை ஏற்றம் ஆகியவைகளை கணக்கில் கொண்டு அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு தங்கும் வசதி, உணவு வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்வதோடு அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

எனவே, தலைவர், மற்றும் நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து பெருமழையால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டங்களில் பழுதுகளை சரிசெய்து மின் இணைப்புகளை வழங்குவதற்கு தேவையான தளவாட சாமான்கள், மின் கம்பங்கள், ஆரம், எல்.டி, எச்.டி, கண்டக்டர் ஆகியவைகளை அளிப்பதோடு அங்குள்ள அசாதாரண சூழ்நிலையையும் கணக்கில் கொண்டு அவர்களுக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

தங்களின் நம்பிக்கையுள்ள

**(எஸ்.எஸ்.சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

நகல் - மண்டல செயலாளர்
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு
விழுப்புரம்

திட்டச் செயலாளர்
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு
கடலூர் வட்டக்கிளை